## எய்ட்ஸ் பற்றிய உண்மைகள்

- வெளித்தோற்றத்தை வைத்து ஒருவருக்கு எச்.ஐ.வி. உள்ளதா? இல்லையா? என்பதை அறிந்து கொள்ள முடியாது.
- பால்வினை நோய் உள்ள ஒருவர் அந்நோயை உடனே குணப்படுத்தாவிட்டால் எச்.ஐ.வி வருவதற்கான வாய்ப்புகள் பலமடங்கு அதிகமாகும்.
- எய்ட்ஸ் நோயை முழுமையாகக் குணப்படுத்த இதுவரை மருந்து எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால், எச்.ஐ.வி உள்ளோரின் உடலில் உள்ள எச்.ஐ.வி கிருமிகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த தற்போது ஏ.ஆர்.டி. கூட்டு மருந்துகள் உள்ளன.

## எய்ட்ஸ் பற்றிய தகவல்கள்

- எய்ட்ஸை முழுமையாக குணப்படுத்த முடியாது.
- எய்ட்ஸ் ஒரு சமூகப் பிரச்சனை.
- எய்ட்ஸைப் பற்றி தெரிந்துக் கொள்ளுங்கள். தெரிந்ததை மற்றவர்களுக்கு எடுத்துக் சொல்லுங்கள்.
- எய்ட்ஸ் வராமல் பாதுகாத்துக் கொள்வது எளிது.
- பாதுகாப்பற்ற உடலுறவை தவிர்த்திடுங்கள்.
- சுத்திகரிக்கப்படாத ஊசிகளைப் பயன்படுத்தாதீர்கள்.

**எய்ட்ஸ் உள்ளோரை அரவணைத்திடுவோம்! அன்பு செலுத்திடுவோம்!**
**எச்.ஐ.வி. கூட்டு மருத்துவச் சிகிச்சைப் பற்றி அறிந்திடுவோம்!**
**அனைவருக்கும் எடுத்துச் சொல்வோம்!**

*** Download the "NACO AIDS APP"**
*** Toll Free : 1097**

National AIDS Control Organisation
India's Voice against AIDS
Ministry of Health & Family Welfare, Government of India
www.naco.gov.in

**பாண்டிச்சேரி எய்ட்ஸ் கட்டுபாட்டு சங்கம்**
புதுச்சேரி – 605 001.
தொலை பேசி : 0413 – 2260160, 2337000
மின் அஞ்சல் : pondicherrysacs@gmail.com



# சிந்திக்க ஒரு நிமிடம்

# சிந்திக்க ஒரு நிமிடம்

## எச்.ஐ.வி. / எய்ட்ஸ்
### எவ்வாறு பரவுகிறது?



- பாதுகாப்பற்ற முறையில் பலருடன் உடலுறவு கொண்டால், எச்.ஐ.வி தொற்றுள்ள நபரிடமிருந்து பரவும்.



- பரிசோதிக்கப்படாத எச்.ஐ.வி கிருமி உள்ள இரத்தத்தை செலுத்துவதன் மூலம் பரவும்.



- எச்.ஐ.வி தொற்றுள்ள கர்ப்பிணிப் பெண்ணிடமிருந்து கருவில் இருக்கும் குழந்தைக்கு பரவும் வாய்ப்பு உள்ளது.



- கிருமி தொற்றுள்ள, சுத்தம் செய்யப்படாத ஊசிகளைப் பகிர்ந்து கொள்வதாலும் பரவும்.

## எச்.ஐ.வி. / எய்ட்ஸ்
### எவ்வாறு பரவாது



- ஒன்று சேர்ந்து விளையாடுவது போன்ற சாதாரண பழக்கவழக்கங்களினால் பரவாது.



- எச்.ஐ.வி. தொற்று உள்ள ஒரு நபரின் இருமல் மற்றும் தும்மல் மூலம் மற்றவருக்கு பரவாது.



- எச்.ஐ.வி. தொற்று உள்ள ஒரு நபர் பயன்படுத்திய கழிவறையை பயன் படுத்துவதன் மூலம் பரவாது.



- எச்.ஐ.வி. தொற்று உள்ள நபர் பயன்படுத்திய பொருட்களைப் பயன்படுத்துவதால் பரவாது.



- கொசுக்கடி மூலம் எச்.ஐ.வி. பரவாது.